பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 10 செவ்வாய்க்கிழமை 24.01.2023 கதிர் 77

**இது ரகசியம் அல்ல!**

இன்றைக்கு இரு வழக்குகள் பற்றிய செய்திகளைத்தான் உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

முதலில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் மீண்டும் முதல்வராகியிருக்கும் ஆனல்ட்டின் நியமனத்தை எதிர்த்து ☞2

## யாழ். மாவட்ட செயலகத்தில் 3 மணி நேரமாக நடந்த கூட்டத்தில்

# காணி விடுவிப்பு குறித்து அதிகாரிகள் நேற்று பேச்சு

## இன்று வடமராட்சி கிழக்கிற்குக் களப் பயணம் செய்வர்

(நா.லோகதயாளன்)

ஜனாதிபதி - சம்மந்தன் கடந்த வாரம் சந்தித்துப் பேசிய போது அரச திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் முன்வைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கான கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கொழும்பில் இருந்து வந்த இரு திணைக்களங்களின் செயலாளர்களும் ஜனாதிபதி செயலகத்தின் இணைப்பாளர் ஒருவரும் கலந்துகொண்டனர். ☞2

## புதிய ஆணையுடைய ஆட்சி மலர வேண்டும்

### சர்வதேச சமூகத்தின் கோரிக்கை இதுவே என்கின்றது சஜித் அணி



மக்கள் ஆணை இல்லாத ஆட்சியை வீழ்த்தி புதிய மக்கள் ஆணை உடைய ஆட்சி மலர வேண்டும் என்பதே உள்நாட்டினதும் சர்வதேசத்தினதும் கோரிக்கையாகும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார். ☞2

## ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர் கோட்டாவா?

### அரசிடம் ஹெக்டர் அப்புஹாமி எம்.பி. கேள்வி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியவர் யார்? உங்கள் முன்னாள் தலைவர் கோட்டாபயவா? அதற்காகத்தான் அவர் மக்களால் விரட்டப்பட்டாரா? எதற்காக அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது? ஆட்சியைப்

பிடிப்பதற்காகவா?. இவை அனைத்தையும் நீங்கள் நாட்டுக்குக் கூற வேண்டும்.

– இவ்வாறு அரசிடம் வலியுறுத்தினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரியை அரசு மறைத்து வைத்துள்ளது. நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

அதே தீர்ப்பை 2019 இல் இருந்து பொருளாதாரத்தைச் ☞9

## நாளை கூடுகின்றது அரசமைப்புப் பேரவை

அரசமைப்புப் பேரவையின் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்று பதவியணித் தலைமை அதிகாரியும் நாடாளு மன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர், பிரதமர் மற்றும் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் சபாநாயகரால் பெயர் குறிப்பிடப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத நபர்களை அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்களாக ☞9

## மாணவியின் வாழ்க்கையில் விளையாடிய மின் தடை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.23

பொருளாதார நெருக்கடியால் நாட்டில் மின் தடை தொடர்கின்றது. உயர் தரப் பரீட்சையின் போது மின்வெட்டின் அளவைக் குறைப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் ஏற்படும் விளைவுகள் யாழ்ப்பாணத்தில் ஒரு மாணவியின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது. ☞9

## ஈஸ்டர் தாக்குதல் தீர்ப்பை மைத்திரி ஏற்க வேண்டும்

### அவரின் கட்சியின் செயலரே கூறுகின்றார்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியாது. தீர்ப்பை ஏற்க வேண்டும். நட்டஈட்டைச் செலுத்த வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற ☞9

## தமிழ்நாடு மீனவர்கள் குழு வெள்ளியன்று யாழ் வரும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.24

தமிழ்நாடு இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் குழு ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது. பலாலி வானூர்தி நிலையம் ஊடாக அந்தக் குழு நேரடியாக யாழ்ப்பாணம் வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காகவே ☞9

# தன் காலத்திலேயே தீர்வை எதிர்பார்க்கிறார் சம்பந்தன்

### அவர் ஒரு மாபெரும் தலைவர் என்று மகிந்த புகழாரம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களுக்குக் கிடைத்த மாபெரும் தலைவர். அவர் நீண்ட கால அரசியல் வரலாற்றைக் கொண்டவர். அவர் தனது காலத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளார். அவருடன் நான் இறுதியாக நடத்திய சந்திப்பின்போது இதை உணர்ந்துகொண்டேன்.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான ☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் முதல்வர் மணிவண்ணன் தரப்பு இன்றைய தினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

நேற்றைய தினமே வழக்கைத் தாக்கல் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் சில ஆவணங்கள் கைக்குக் கிடைக்காத காரணத்தால் அதனைத் தாக்கல் செய்ய முடியவில்லை. நேற்றுப் பிற்பகலுக்குப் பிறகே யாழ். மாநகர சபையிலிருந்து அந்த ஆவணங்கள் மணி தரப்புக்குக் கிடைத்தன. அதனால் இன்று காலை வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது.

புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 19ஆம் திகதி நடந்தபோது கூட்டத்தில் நிறைவெண் (கோரம்) இல்லை என்று கூறி முதல்வர் தெரிவை ஒத்திவைப்பதாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பிரணவநாதன் பகிரங்கமாக அறிவித்த பின்னர் எந்தக் கலந்துரையாடல்களும் இன்றி வர்த்தமானி மூலம் ஆனல்ட் மேயர் என்கிற அறிவிப்பை விடுத்தமை, இரண்டு தடவைகள் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் பதவியிழந்த ஒருவர் மீண்டும் முதல்வர் பதவிக்குப் போட்டியிட முடியாது என்கிற விதி ஆகியன உட்பட மேலும் சில விடயங்களைச் சுட்டிக்காட்டி கட்டாணை பெறுவதற்கான முயற்சியில் மணி தரப்பு இன்று இறங்கும்.

ஆனல்ட் முதல்வராகச் செயற்படுவதைத் தடுத்துவிடும் வகையில் எப்படியாவது கட்டாணை ஒன்றைப் பெற்றுவிடுவது என்று மணி தரப்பு கங்கணங்கட்டிக் கொண்டு நின்று செயற்படுகின்றது. எப்படியும் வழக்கு என்று வந்துவிட்டால் ஆனல்ட் பக்கமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே வழக்காடுவார் என்று எதிர்பார்க்கலாம். எந்தச் சட்டபுலமையின் வாதம் இன்று பலம் காட்டுகின்றது என்று பார்க்கலாம்.

மற்றொரு வழக்கும் உள்ளூராட்சித் தேர்தலையொட்டியதுதான். அது முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த நிகழ்வு ஒன்று தொடர்பானது. தமிழ் அரசுக் கட்சியின் கரைத்துறைப்பற்று பிரதேச சபை வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றை நாடுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த 21ஆம் திகதி நிறைவடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு தமிழ் அரசுக் கட்சி தாக்கல் செய்த வேட்பு மனு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தினால் நிராகரிக்கப்பட்டது.

கட்சியின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவரான மருத்துவர் சிவமோகன் விண்ணப்பத்தை நேரில் கையளிக்கவில்லை என்பதே நிராகரிப்புக்கான காரணமாகக் காட்டப்பட்டது. ஆனால், நடைமுறைக் குளறுபடிகளே அத்தகைய நிலை ஒன்று தோன்றுவதற்கான காரணம் என்று கட்சித் தரப்பில் விளக்கமளிக்கப்படுகின்றது.

மற்றைய எல்ல மாவட்டங்களிலும் அனைத்துச் சபைகளுக்குமான வேட்பு மனுக்களும் ஒரே இடத்திலேயே பெறப்பட்டன. ஆனால் முல்லைத்தீவில் மட்டும் 4 தனித் தனி அறைகளில் ஒவ்வொரு சபைக்குமான வேட்புமனுக்கள் பெறப்பட்டன. பெயர் கூப்பிடப்படும்போது உரியவர் சென்று வேட்புமனுவைக் கையளிக்க வேண்டும். கட்சிச் செயலாளரின் பிரதிநிதியாக ஒருவரே நியமிக்கப்படமுடியும் என்கிற நிலையில் அவரே நான்கு இடத்திற்கும் ஓடி ஓடி மனுக்களை வழங்கவேண்டியிருந்தது.

அப்படிப்பட்ட ஒரு நிலையிலேயே மருத்துவர் சிவமோகன் இந்தப் பகுதியில் மற்றொரு வேட்புமனுக் கையளிப்பில் கவனமாக இருந்த காரணத்தால் கரைத்துறைப்பற்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டபோது தனது கையிலிருந்த படிவங்களை இன்னொருவரிடம் கொடுத்து அனுப்பியிருந்தார் என்றும் இப்படித் தனித் தனி இடங்களில் அல்லாமல் ஒரே இடத்தில் படிவங்கள் பெறப்பட்டிருந்தால் இந்தச் சிக்கல் எழுந்திராது என்றும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும்போது அந்த அறைக்கு அருகிலேயே அதிகாரமளிக்கப்பட்ட மூவர் இருந்தார் என்பதையும் வைத்து நிராகரிப்புக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஓரிரு நாட்களில் இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் உள்ள ஒரேயொரு சிக்கல், மற்றைய கட்சிகாரர்கள் எல்லோருக்கும் குளறுபடியாக இல்லாத ஒரு விடயம் இந்த கட்சிக்கு மட்டும் எப்படிக் குளறுபடியானது என்கிற கேள்விக்கு என்ன விடை என்பதில்தான் தங்கியருக்கிறது. பார்க்கலாம் என்னதான் நடக்கிறது என்று!

- இடிமின்னல் -

## காணி விடுவிப்பு குறித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த கொழும்பு அதிகாரிகள் இன்றும் இங்கு தங்கியிருந்து விடுவிக்கப்படவேண்டிய பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளனர். நேற்று நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளுக்கு களப் பயணம் மேற்கொண்ட அவர்கள் இன்று வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வார்கள் என்று தெரிகின்றது.

போருக்குப் பின்னர் வடமராட்சி கிழக்கில் தேசிய பறவைகள் சரணாலயம் ஒன்றைப் பிரகடனப்படுத்திய கொழும்பு அரசு அதற்கான நிலங்களையும் கையகப்படுத்தியது. 19 ஆயிரத்து 368 ஏக்கர் நிலம் இவ்வாறு அரசால் பெறப்பட்டது. ஆனால், அதில் 4 ஆயிரத்து 368 ஏக்கர் பொது மக்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகள்.

கொழும்பிலிருந்து கூகுள் வரைபடத்தில் பார்த்துவிட்டு பற்றைக் காடுகளாக் காணப்பட்ட பகுதிகள் அனைத்தையும் சரணாலயத்திற்குரியது என்று அதிகாரிகள் அறிவித்துவிட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. எனவே மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று நீண்ட காலமாகவே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. காணிகளை விடுவிப்பதற்கு நல்லாட்சி அரசின் காலத்தில் இருந்தே அரசு இணக்கம் தெரிவித்து வந்தாலும் இன்னும் அது நடைமுறைக்கு வரவில்லை.

இதனால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் – ஜனாதிபதி பேச்சில் இந்த விடயமும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டியதாக வலியுறுத்தப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி இந்த விடயத்தை ஆராய்ந்து அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைக்குமாறு புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சிக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்தே கொழும்பிலிருந்து உயிரதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து இது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். யாழ். மாவட்ட செயலகத்தில் 3 மணி நேரமாக இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதன்போது காணொலி வாயிலாக கொழும்பிலிருந்தும் வேறு சில உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் ஊடகங்களுக்கு இந்தக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இன்றைய கூட்டம் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தின் சமூக விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டங்களில் விடுவிக்கப்படாத பல காணிகள் காணப்படுகிறன. அதற்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், காணி குறித்த அதிகாரி, வனத்துறை அதிகாரிகள், என அனைவரையும் வரவைத்து மக்களிற்கான காணிகளை விடுவிக்கவும், இராணுவத்தினர் வசம் உள்ள 80 ஏக்கர் காணிகளை சட்டபூர்வமாக பெறுவதற்கும் இன்று பேச்சு நடத்தப்பட்டது.

வனத்துறை அமைச்சிற்கு கீழ் உள்ள காணிகளை சட்ட பூர்வமாக விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. பிரச்சினைகள் உள்ள காணிகளை விடுவித்து உரிய மக்களிற்கு காணிகளை விவசாயத்திற்கும், கட்டடங்களை கட்டுவதற்கும் வழங்க வேண்டும். மற்றும் அரசாங்க தேவைகளிற்கும் கட்டிடங்கள் அமைப்பதற்கும் சட்ட பூர்வமாக காணிகளை வழங்க வேண்டும்.

இன்று முதல் குறைந்த பட்சம் 3 மாத காலத்திற்குள் இப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து காணிகளை கையளிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

அதேபோல பாதுகாப்பு துறையும் அடுத்த வாரங்களில் காணி பிரச்சனைகளை விடுவித்து தருவதாக கூறி உள்ளனர். – என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக அரசா அதிபர்(காணி) முரளி, மேலதிக அரச அதிபர் பிரதீபன், வனவள திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மறும் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## புதிய ஆணையுடைய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான காலம் நெருங்கிவிட்டதால் அதை நடத்த வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

உண்மையில் நாங்கள் விரும்புவது உள்ளூராட்சி சபைத் தேர்தலை அல்ல. உடனடி ஜனாதிபதித் தேர்தலையும் அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலையுமே நாங்கள் விரும்புகின்றோம்.

நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றால் தேவையற்ற செலவுகள் எல்லாம் குறைக்கப்பட வேண்டும். அமைச்சர்களின் வெளிநாட்டு சுற்றுலாக்கள் – விழாக்கள் ஏதும் குறையவில்லை. பெரும் காட்சியோடு – அதிகம் செலவழித்து 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படியான செலவு தேவை இல்லை. மக்களுக்கு மருந்துகள் இல்லை. உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. பொருட்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இந்த நிலையில் இவ்வளவு பணம் செலவழித்து சுதந்திர தினத்தைக் கொண்டாடத் தேவையில்லை.

(09ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

காலைக்கதிர் Kalaikkathir

# அமரர் தர்மலிங்கத்தைப் படுகொலை செய்தவர்களுடன் இன்று அவரது மகன் கூட்டுச் சேர்ந்தமை வேதனையே!

## வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம் ஆகியோரை ஒரேநாளில் படுகொலை செய்து தமிழ் மக்களை சோகத்தில் ஆழ்த்திய கஜவர் கூட்டத்துடன் இன்று தர்மலிங்கத்தின் மகன் கூட்டுச் சேர்ந்துள்ளமை வேதனையைத் தருகின்றது.

– இவ்வாறு தெரிவித்தார் வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ்.

தர்மலிங்கத்தின் நினைவுத் தூஜுபிக்கு நேற்று (திங்கட்கிழமை) மாலை சென்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இவங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்களில் அமரர் தர்மலிங்கமும் ஒருவர். அவர் போட்டியிட்ட எந்தத் தேர்தலிலும் தோல்வியுற்றமை கிடையாது. இதனால்தான் அவரை மக்கள் முடிசூடா மன்னர் என்று அழைத்தார்கள். அந்த அளவுக்கு அவர் மக்கள் மனங்களில் இடம்பிடித்திருந்தார்.

அவரது மகன் ஆயுதக்குழு உறுப்பினராக இருந்து பின் ஜனநாயக வழியில் தேர்தலில் போட்டியிட்டபோது தந்தையின் பெயரையும் தமிழரசுக் கட்சியின் பெயரையும் பயன்படுத்தித்தான் மக்கள் மனங்களை வென்றார். இன்று தர்மத்தையே கற்றுத் தந்த தர்மரின் சிலையில் அவரது பெயருக்கும் புகழுக்கும் காரணமாக இருந்த தமிழரசுக் கட்சியின் பெயர் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. அதனைத் தமிழரசின் வாலிபர் முன்னணியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று (நேற்று) காலை தர்மலிங்கத்தின் சிலை திறப்புவிழா நிகழ்வில் அவரை யார் கொலை செய்தார்களோ அந்த ஆயுதக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் கலந்துகொண்டுள்ளார்கள். இன்று தனது தந்தையைக் கொன்ற கஜவர்களுடன் அவரது மகன் கூட்டுச் சேர்ந்துள்ளமை வேதனையைத் தருகிறது. – என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் கருத்துத் தெரிவிக்கையில் –



எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பது நிச்சயம். தமிழரசுக் கட்சி ஆட்சி அமைத்ததும் இந்தச் சிலையில் கட்சியின் பெயரைப் பொறிக்க வேண்டும். – என்றார்.

## தர்மலிங்கத்தின் நினைவுத் தூபியில் தமிழரசு பெயர் திட்டமிட்டு மறைப்பு!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மானிப்பாய் கிராமசபையின் முன்னாள் தலைவருமான அமரர் தர்மலிங்கத்தின் உருவச் சிலை வலி.தெற்கு பிரதேசசபையின் முன்றிலில் நேற்று (திங்கட்கிழமை) காலை திறந்துவைக்கப் பட்டது.

அந்த நினைவுத் தூபிக்குக் கீழே பொறிக்கப் பட்ட கல்வெட்டில் தமிழரசுக் கட்சியின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை இது திட்டமிட்ட உருமறைப்பு என் நேற்று பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் சிலைக்கு அஞ்சலி செலுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர்முன்னணியின் உறுப்பினர்கள் மேற்படி விடயம் தொடர்பில் தமது வருத்தத்தைத் தெரிவித்தனர்.


நேற்று காலை இடம்பெற்ற நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா பங்குபற்றியிருந்தார். அவர்கூட இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 1917ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நாணயத்தாள் நான்கரை லட்சம் ரூபாயிற்கு விற்பனையாகின!

1917ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நாணயத்தாள் ஒன்று நான்கரை லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த இரண்டு ரூபாய் நாணயத்தாளின் பின் புறம் அச்சிடப்படவில்லை என்பதுதான் இதன் சிறப்பு.

இந்த நாணயத்தாளின் முன் பக்கம் மட்டும் அச்சிடப்பட்டுள்ளது. அதன் பின்புறம் வெள்ளை நிறத்தில் இருக்கும்.




இலங்கை சுதந்திர முத்திரை ஆர்வலர்கள் சங்க உறுப்பினர் எஸ். என். ஜாக்சன், பழைய நாணயத்தாள்களின் ஏலத்தில் இந்த வகை நாணயத்தாள்களுக்கு அதிக கிராக்கி இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் சடலமாக கரைஒதுங்கினார்

### பேசாலையில் சம்பவம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.23

மன்னார் பேசாலை கடற்கரையில் இருந்து கடந்த 20 ஆம் திகதி மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் இன்று திங்கட்கிழமை(23) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்தவரும்தற்போது பேசாலை பகுதியில் வசித்து வருபவருமான 26 வயதுடைய கஸ்டார் அலெக்ஸாண்டரின் சடலம் அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கஸ்டார் கிளிநொச்சி கோணாவில் யூனியன் குளம் பகுதியைச் சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை. இவர் பேசாலையில்குடும்பத்துடன்தங்கி இருந்து கடந்த சில மாதங்களாக மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

20 ஆம் திகதி பேசாலை கடற்கரை துறைமுகத்திலிருந்து மாலை 3 மணியளவில் மீன் பிடிக்க சென்றுள்ளனர். இவருடன் மேலும் இரண்டு மீனவர்கள் சென்றுள்ளனர்.

தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது – வலை கிழிந்துள்ளது. அதனைச் சீர்ப்படுத்தி தொழிலில் ஈடுபட்டபோதும் தொழில்பாடு பெரிதாக இல்லாத காரணத்தால் கரைக்குத் திரும்பியிருக்கிறார்கள். இரவு சுமார் 9.30 மணி அளவில் பேசாலை கரைக்கு திரும்பி கடற்கரைக்கு சற்று தொலைவில் படகை நங்கூரமிட்டு நிறுத்திவிட்டு அங்கிருந்து மூவரும் நீதியே கரைக்குத் திரும்பியுள்ளனர்.

அவர்களில் இருவர் கரையை வந்தடைந்தபோதும் ஒருவர் வரவில்லை. அது பற்றிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளனர்.

இன்று திங்கட்கிழமை (23) காலை பேசாலை மீன்பிடி துறை முகத்திற்கு மேற்கு பக்கமாக ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது. அது காஸ்டாருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

இவருடன் தொழிலுக்கு சென்ற இரண்டு மீனவர்கள் மற்றும் அவரது மனைவி, உறவினர், தொழில் உரிமையாளர் ஆகியோரிடம் பேசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் என்பது மக்களுக்கான உரிமை அதனை எவரும் தட்டிப்பறிக்க முடியாது!

### அடித்துக்கூறுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜன. 24

தேர்தல் என்பது மக்களுக்கான உரிமை எனவும் அதனை எவரும் தட்டிபறிக்க முடியாது எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிற்போடப்படுமானால் மக்கள் புரட்சியின் 2 ஆவது அலை உருவாகும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது!

போதைப்பொருள் மாத்திரைகளுடன் மல்லாகம் பகுதியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை பலாலி விமானப்படை புலனாய் பிரிவுகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்த இளைஞன் 250 போதைப்பொருள் மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டார்.

கைதானவர் ஏழாலை தெற்கைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



கைதான சந்தேக நபர் இன்று (செவ்வாய்க்கிழமை) மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரல் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆணைக்குழுக்களின் சுயாதீனம் அவசியம்

**பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்கவை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கின்றார்கள் என்று செய்திகள் வருகின்றன.**

**நாடாளுமன்றத்தின் ஊடாக அவரைப் பதவி விலக்குவதற்கே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆட்சியாளர்களுக்கும் ஆணைக்குழுத் தலைவருக்கும் இடையே எழுந்துள்ள முரண்பாடே இத்தகைய முயற்சிகளுக்குக் காரணம்.**

**மின் கட்டணத்தை 60 முதல் 65 சதவீதம் வரை உயர்த்துவதற்கான யோசனை மின்சாரத் துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது. ஆனால், அந்தக் இந்தளவிற்குக் கட்டண அதிகரிப்புத் தேவையில்லை என்று ஆணைக்குழுவின் தலைவர் வாதாடுகின்றார். அத்துடன் அரசு கட்டணத்தை உயர்த்துவதையும் கடுமையாக எதிர்க்கின்றார்.**

**இதையடுத்து அவரைத் தனது வழிக்குக் கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்கள் கடுமையாக முயற்சிக்கிறார்கள். கட்டண அதிகரிப்பை ஆணைக்குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் முதலில் எதிர்த்திருந்தார்கள். ஆனால் அவர்களில் இருவரைத் தனியே அழைத்து அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாடியதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் கட்டண அதிகரிப்புக்கு பச்சைக்கொடி காட்டி விட்டார்கள். ஆனாலும் தலைவர் தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்கின்றார்கள்.**

**அதனாலேயே அவரை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தின் ஊடாகப் பதவி நீக்க ஆளும் தரப்பினர் முயற்சிக்கின்றார்கள். அல்லது அப்படிப் பயமுறுத்துகின்றார்கள். இது அரசின் முடிவை ஆணைக்குழுத் தலைவரும் ஆமோதித்தே ஆகவேண்டும் என்று கொடுக்கப்படும் அழுத்தம்தான்.**

**இப்படி ஆணைக்குழு மீது கடும் அழுத்தத்தையும் நெருக்கடியையும் கொடுத்து அரசின் முடிவுகளை அதனை ஏற்கச் செய்வதாக இருந்தால் சுயாதீனமான ஆணைக்குழுக்களை அமைப்பதில் எந்தப் பயனும் இல்லை. தான்தோன்றித்தனமான அரசின் செயற்பாடுகளிளைக் கட்டுப்படுத்தி நெறிமுறைப் படுத்துவதற்காகத்தான் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அப்படியிருக்கும்போது – அத்தகைய ஆணைக்குழுக்கள் அரசின் தாளத்திற்கு ஏற்ப ஆடவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல.**

**எனவே இவ்வாறு சுயாதீன ஆணைக்குழுக்களை தனக்கு அடிபணிய வைக்கும் அரசின் முயற்சிகள் கைவிடப்பட்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் அதன் உண்மைத் தன்மையோடு செயற்படுவதற்கு அரசு அனுமதிக்கவேண்டும். இல்லையேல் ஆணைக்குழுக்கள் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகத்தான் இருக்கும்.**

# சுதந்திரக் கட்சியின் பிழையான தீர்மானமே பதவிவிலக காரணம்

## பைசர் முஸ்தபா கூறுகிறார்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவம் அண்மைக்காலத்தில் எடுத்துவந்த தீர்மானங்கள் எனது அரசியல் கொள்கைக்கு முரணானவை.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான குழுவினருடன் இணைந்து செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தொடர்ந்தும் இருக்க முடியாது.

அதனால் கட்சியில் வகித்த அனைத்து பதவிகளில் இருந்தும் விலகிக்கொண்டேன் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து விலகுவதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு, இனவாதத்துக்கு எதிரான கொள்கையுடைய கட்சியாகவே ஆரம்பம் முதல் இருந்துவந்தது.

என்றாலும், அண்மைக்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் தொடர்ந்து நிலையான தீர்மானம் எடுக்கத் தவறி வருவதால், பலரும் கட்சியில் இருந்து விலகிச்செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதன் பிரகாரம், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மேற்கொண்டுள்ள சில தீர்மானம் எனது கொள்கைக்கு முரணானது. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தொடர்ந்து இருக்க முடியாது என்பதால் கட்சி உறுப்புரிமையை இராஜினாமா செய்ய தீர்மானித்து, கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்து நீங்கிக் கொண்டேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சட்ட உதவிளை நானே மேற்கொண்டுவந்தேன். அந்த நடவடிக்கையை அவர் விரும்பினால், தொடர்ந்து முன்னெடுப்பேன். கட்சியில் இருந்து விலகினாலும், தனிப்பட்ட ரீதியில் யாருடனும் பகையாக இல்லை.

எனது பதவி விலகல் தொடர்பாக பல்வேறு செய்திகள் ஊடகங்களில் வெளியாகி இருக்கின்றன. குறிப்பாக, ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துகொள்ளப்போவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் எந்த உண்மையும் இல்லை. எந்த கட்சியிலும் இணையும் எண்ணம் எனக்கில்லை. என்றாலும், எனது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னுக்கு கொண்டு செல்வேன்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய கொள்கை எனது கொள்கைக்கு முரணானது. முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வருபவர்களுடன் எனக்கு இருக்க முடியாது.

இதனால் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது கடினமாகும். முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக செயற்பட்டவர்களுடன் இணைந்து செயற்படுவதை என்னைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் மீண்டும் இணைந்துகொள்ளப்போவதில்லை. கட்சியை விட எனது சமூகத்தின் கௌரவம் மேலானது. – என்றார்.



# கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலில் மக்கள் போராட்டம்!

கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலை முற்றுகையிட்டு நேற்று (திங்கட் கிழமை) பிற்பகல் தொழிற்சங்கங்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டன.

அரசின் புதிய வரிக் கொள்கைக்கு எதிராக அவர்கள் நடத்திய போராட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதனால் கொழும்பு முதல் குறுக்குத் தெரு மற்றும் என்.எச்.எம். அப்துல் காதர் மாவத்தை முற்றாகத் தடைப்பட்டது.

போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# மின்சார மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் விதிகளை வகுக்ககுழு!

கொழும்பு, ஜன. 24

இறக்குமதி செய்யப்படும் மின்சார மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வது தொடர்பான விதிமுறைகளை வகுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிராந்த அநுருத்த தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏதுவாக மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த மின்சார வாகனங்களைப் பதிவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக நிராந்த அநுருத்த தெரிவித்துள்ளார்.

# பொருளாதாரம், ஜனநாயகம் இரண்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு!

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



நாட்டின் பொருளாதாரம், மக்களின் ஜனநாயகம் ஆகிய இரண்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதி மன்றம் வழங்கும் தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்துவோம் என சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடு மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருள், மருந்து உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு நிதி ஒதுக்குவது பெரும் சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ள பின்னணியில் 10 கோடி ரூபா செலவுசெய்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது அவசியமானதா என்பது பொருளாதார நிபுணர்களின் பிரதான தர்க்கமாக உள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் நோக்கத்துக்கு அமைய செயற்பட முடியாது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்திக் கொண்டு செயற்பட்டால் பிரச்சினைகள் தீவிரமடையுமே தவிர எதற்கும் நிலையான தீர்வு காண முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் அரசியல் ரீதியில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின், இரு பிரதான அரசியல் கட்சிகளும் அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என தீர்மானித்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தைத் தோற்றுவித்து குறுகிய காலத்தில் நிலையான தீர்வுக்காக கடுமையான திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடி அனைவருக்கும் ஏதாவதொரு வழிமுறையில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் முடிவுக்கு கொண்டு வந்தமை அரசாங்கம் பெற்றுக்கொண்ட பிரதான வெற்றியாகும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயார். ஆனால், நாடு என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாரா என்பது தொடர்பாக ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என ஒரு தரப்பினரும், தேர்தலை நடத்தக்கூடாது என பிறிதொரு தரப்பினரும் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நிதியமைச்சின் செயலாளர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்துவோம்.

நாட்டின் பொருளாதாரம் மக்களின் ஜனநாயகம் ஆகிய இரண்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. பொருளாதாரம் ஸ்திரமாக இருந்தால் தான் அனைத்து விடயங்களையும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். – என்றார்.

## நைஜீரிய பிரஜை ஒருவர் மிரிஹனவில் கைதானார்!

செல்லுபடியாகும் வீசா இன்றி நாட்டில் தங்கியிருந்த நைஜீரிய பிரஜை ஒருவர் மிரிஹனவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசிய தகவலின் அடிப்படையில், மிரிஹான பொலிஸார் 40 வயதுடைய மேற்படி நபரை வீடொன்றில் வைத்து கைது செய்துள்ளனர்.

சோதனையின் போது மடிக்கணினி பறிமுதல் செய்த பொலிஸார் குறித்த நபர் ஏதேனும் மோசடி அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டாரா என்பது தொடர்பில் விசாரணை செய்து வருகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நைஜீரிய பிரஜையை நேற்று (திங்கட்கிழமை) கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# இலஞ்சம் வழங்கும் வேட்பாளர்களிடம் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன.24

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இலஞ்சம் வழங்கும் வேட்பாளர்களிடமிருந்து மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கிடைக்கப்பெறும் தேர்தல் சட்ட மீறல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிலர் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச அதிகாரம் மற்றும் அரச வளங்களை முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக அரச அதிகாரிகள், குறிப்பாக உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், நகர ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று வேட்பாளர்களும் மக்கள் பிரதிநிதியாவதற்கு தகுதியானவர்கள் என்ற வகையில் செயற்படவேண்டும் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவை பிரதிபலிக்கும் பட்டங்கள் வல்வெட்டித்துறை பகுதியில் பறந்தன!






இந்தியாவை பிரதிபலித்து யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் பட்டங்கள் பறக்கவிடப்பட்டன.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் மற்றும் 74 ஆவது குடியரசு தினம் ஆகியவற்றை முன்னிட்டு ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் என்ற கருப்பொருளின் கீழ், இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியக் கொடியின் நிறங்களைக் கொண்ட அழகான பட்டங்கள் திறந்த வெளியில் பறக்கவிடப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், உள்ளிட்ட இந் திய துணைத் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# ஊடகச் செயலமர்வும் சான்றிதழ் வழங்கலும்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கு நடத்தப்பட்ட இருநாள் ஊடகச் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வும் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.

போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது மழ்ஹருஸ் ம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சீ. றிப்கா அன்ஸார் கலந்துகொண்டார். இச்செயலமர்வில் கலந்து 37 இளைஞர், யுவதிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெண்களை ஊடகத்துறையில் வலுப்படுத்தல் எனும் திட்டத்தினூடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவிகளையும் ஊடகத்துறைக்குள் உள்வாங்கும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ர்பீனின் முயற்சி பாராட்டப்பட்டு சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.





# கொள்ளை சந்தேகநபர்கள் 5 பேர் கைது

முல்லேரியா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் வீடொன்றில் அத்துமீறி நுழைந்து 35 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச்சென்றவர்கள் என்கிற சந்தேகத்தில் ஐவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 5 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் உட்பட்ட கொள்ளையிடப்பட்ட பொருட்களில் பலவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 26 மற்றும் 50 வயதுடையவர்களாவர். உடுமுல்ல, முல்லேரியா, பத்திரமுல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் ஐவரும் நன்கு திட்டமிட்டு இந்தக் கொள்ளையை அரங்கேற்றியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

*Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=*
*Chiken Fried Rice with Vegetable - 1100/=*
*Kothu Rotty With Vegitable in Indian Style*

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஆட்டங்களும் நட்டுவாங்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 247

சர்வாதிகாரி ஹிட்லர் தனது பிரசாரங்களிலும், வியூகங்கள் பற்றிய பேச்சுக்களிலும், இங்கிலாந்தைப் பற்றி இளக்காரமாகவே பேசினான். எத்தனையோ ஐரோப்பிய நாடுகளை எதிர்ப்புகள் இன்றி, பணிய வைத்து, பிரான்ஸையும் கைப்பற்றிய பின், அங்கிருந்து சிறிய ஆங்கில கால்வாயைக் கடந்து, இங்கிலாந்தையும் கைப்பற்றி, அதனுடைய ஏகாதிபத்திய நாடுகள் எல்லாவற்றையும் தனது அதிகாரத்துக்குள் கொண்டு வந்திருக்கலாம்.

ஆனால் அவன் பிரான்ஸ் வெற்றிக்குப் பின் "இங்கிலாந்து ஒரு கோழி குஞ்சு. ஆங்கிலக் கால்வாயைக் கடந்து அதன் கழுத்தைநெருடிஉயிரைப்போக்குவதற்கு நாள்கள் தேவை இல்லை. ஆனால் அதற்கு முன் கிழக்கிலே படுத்திருக்கும் கரடியை (ரஷ்யாவை) ஒரு பார்வை பார்த்துவிட்டு வருகிறேன்" என மார் தட்டினான்.

ரஷ்யாவின் கொடும்பணியில் ஹிட்லரது படைகள் புதைந்து, மொஸ்கோவை நோக்கி முன்னேற முடியாமல் திணற, அந்த இடைவெளியில் இந்தக் கோழிக் குஞ்சு இங்கிலாந்து தன்பாட்டில் அமெரிக்கா, ரஷ்யாவுடன் இணக்கம் கண்டு, போரை வெற்றிகரமாக நடத்தியது.

இந்தியாவின் தென்கோடியில், பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டு, இந்தியாவுடன் உளமாற நட்பில் இல்லாமல், சாமர்த்தியமான ராஜதந்திர உறவுகளால் இந்தியாவுடன் கண்ணாமூச்சி விளையாடி, தன்னை தக்க வைத்துக் கொள்கிறது ஸ்ரீலங்கா. இந்தத் தந்திரமான ராஜதந்திரம், தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கைகளையும் பின்னரான விடுதலைப் போராட்டத்தையும் 75 வருட காலமாக மழுங்கடிக்க உதவியது.

ஜே.ஆர். அமெரிக்காவுடன் சேர்ந்து நின்று, பின் இந்தியா தனது படைகளுடன் உள்ளீடு செய்தும், கடைசியில் ஜனாதிபதி பிரேமதாஸா அமெரிக்கா, ரஷ்யா, சீனாவின் உறவுகளைத் தன் பக்கம் வைத்து, ஆனால், விடுதலை புலிகளிலே தங்கி இருந்து, அவர்களை (இந்தியப் படைகள்சி) வெளியேற்றினார்.

மாத்தையா, யோகி, பிரபாகரனுக்கு இடையே இருந்த முரண்பாடுகள், மாத்தையாவும் யோகியும் இந்தியாவுடன் சகஜ நிலைமை திரும்புவதற்காக விடுதலைப் புலிகளின் பாதைகளுக்கு குழி பறிக்கிறார்கள் என்பதுதான் அப்போது கூறப்பட்டது. தற்சமயம் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித், தனது தந்தையார் பிரபாகரனுக்கு யோகியுடனும், மாத்தையாவுடனும் இருந்த பிரிவுகளை விரிவுபடுத்தவே அவர்களுக்கு உதவி வழங்கி, விடுதலைப் புலிகளின் இந்திய எதிர்ப்பு நிலைக்கு ஊக்கங்கள் தந்தார் என நாடாளுமன்றத்தில் கூறுகிறார்.

தமிழ் மக்களுக்காக நடத்தப்பட்ட அரசியலில் யாரை யார் நோவது? யார் அவர்களுக்காக பச்சாதாபப்படுவது?

ஸ்ரீலங்கா சிறிய தீவானாலும், இந்து மகாசமுத்திரத்தின் நெற்றிப் பொட்டு போல்கடல், விமானபோக்குவரத்துகளின் கேந்திர நிலையில் அமைந்துள்ளமையால், அதன் நிலப்பரப்பும், விமான, கப்பல் தளங்களும், வல்லரசுகளின் போட்டிகளில்சிக்குண்டு, ஒவ்வொருவல்லரசும், தனது பாதுகாப்பு உறவுகள் என்று அங்கலாய்க்கின்றன. தனது வசதிக்கேற்ப ஸ்ரீலங்காவும் அமெரிக்கா, சீனா, ரஷ்யாவின் மார்புகளில் சாய்ந்து இந்தியாவின் முழுமையான பிடியிலிருந்து விலக்கி நிற்கிறது. அதனால் இந்தியாவும் அதனது ஆட்டத்திற்கு விட்டுக் கொடுத்தே சர்வதேசத்தில் உறவைக் கொண்டிழுக்க வேண்டியுள்ளது.

சீனாவை மட்டுப்படுத்த இந்தியா அமெரிக்காவுடன் உறவுகளை நட்பாகப் பேணி வந்தாலும், இந்தியப் பிராந்தியத்தின் அனுகூலத்திற்காக ஒவ்வொரு நாடும் ஸ்ரீலங்காவுடன் தனித்தனியான ஒப்பந்தங்கள் வைப்பதும், வல்லரசுகளின்



உலக அரங்க நடவடிக்கைகளுக்கு ஒவ்வாதவையும் அவற்றினால் வரும் பிணக்குகளும் தனது காய்களை நகர்த்த ஸ்ரீலங்காவுக்கு வசதிகளைத் தருகின்றன.

உக்ரேனுக்கு எதிரான ரஷ்யாவின் போரில் அமெரிக்காவின் ஒட்டுமொத்த அரசியல் நிலையையோ, விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையையோ இந்தியா ஆதரிக்காது, தனது வசதிகளுக்காக ரூபாய் மதிப்பில் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வது அமெரிக்காவின் குமுறலைச் சந்தித்துள்ளது.

அதனாலோ என்னவோ, உலக அரங்கில் தனது திட்டத்திற்காக காஷ்மீர் பிரச்சினையில் சிறிது புரிந்துணர்வோடு நடக்கக்கூடிய பிரதமர் இம்ரான் கானின் ஆட்சியைக் கவிழ்த்து, அமெரிக்கா, இந்தியாவின் எல்லையில் தனக்கு கட்டுப்பட்டு நடக்க கூடிய அரசை அமைத்துள்ளது.

அதேபோல சீனாவும் நேபாளம், பர்மா, மணிப்பூர், தீபெத், நாகலாந்து என வடகிழக்கு பிரதேசங்களில் இந்தியாவின் கண்களில் விரலை விட்டு ஆட்டுகிறது. பழையபடி காலிஸ்தான் பிரிவினைவாதிகள் பஞ்சாபில் தலை தூக்குகிறார்கள்; தூண்டிவிடப்படுகிறார்கள். இவை எல்லாவற்றோடும் இந்தியாவும் தனது நடனங்களை, மெய் தடவிய மேடைகளில் அவதானமாக ஆடுகிறது.

ஸ்ரீலங்காவின் மூலம் தென் மூலையில் சீனாவின் தளம் அமைவதை மட்டுப்



படுத்த முயற்சிகள் மேற்கொண்டு, தனது தொப்புள் கொடி உறவுகளான தம்பிமாரையும் அனுசரித்துப் போகவும், தனது எல்லையையும் தெரிவித்தது.

இந்த நீரோட்டங்களுக்கு இடையில்தான் தமிழ் மக்கள் தங்களது அரசியல் பாதைகளை வகுப்பவர்களாகவும், சர்வதேசங்களுக்கு இடையே ஆதரவுகளையும் தேடிக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆகாய விமானம் காற்றை எதிர்த்துத்தான் வானத்தில் கிளம்பிப் பயணிக்கிறது. அந்தத் திராணிகளுடன் எதிர்த்து வானத்தில் கிளம்பிய விமானம், பிராந்தியக் கால நிலைகளையும் புயல்களையும் தப்புக் கணக்குப் போட்டதால் விழுந்து சிதறியது. கடலில் மிதக்கும் கப்பலோ அலைகளை அனுசரித்து பயணிக்காவிட்டால், அந்த அலைகளாலேயே மூழ்கடிக்கப்படுகின்றது. ஒருவன் பயணிக்க விழையும் வாகனமும், சுற்றுச்சூழல்களும் அந்த மனிதனின் பயணத்தின் வழிகளையும் தீர்மானிக்கின்றன. கரைசேர ஒரு துடுப்பு கிடைக்குமானால் அது பெரிய ஆதரவு.

தத்தமக்கு ஏற்றபடி சர்வதேசங்களின் ஆதரவு கிடைக்காத தீர்வுகளை முன்னெடுத்த முன்னணிகளையும் உள்ளடக்கி, ஏழு கட்சிகளையும் ஒன்றாக வைத்து, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெளிவாக இந்தியாவின் நிலைப்பாட்டையும் அது தரக்கூடிய ஆதரவையும் விளக்கமாகச் சொல்லியுள்ளார். தீர்வுகள் பற்றியே பேசிக் கொண்டிராமல், ஒரு தீர்வில் இருந்து முன்னேறிக் கொண்டு, மற்றவைகளின் பாதைகளை செப்பனாக்க வேண்டும் என்பது சுருக்கமாகத் தரப்பட்ட அறிவுரை. அவரோடு அந்தக் கூட்டத்தில் கலந்திருந்த பல கட்சிக்காரரை விட, கலாநிதி ஜெய்சங்கர், விடுதலைக் குழுக்கள், அவர்களது தலைவர்கள், பிணக்குகள், போட்டிகள் என யாவும் அனுபவங்களால் அறிந்தவர். சமஷ்டி, இறைமை மீட்பு, தமிழ்த் தேசம், தமிழீழம் என்பவை எல்லாம் தமிழ் மக்கள் தங்களுக்கு உகந்த தீர்வுகளாகப் பார்த்தாலும், இன்றுவரை சர்வதேசம் அவற்றுக்கு ஆதரவு தராதமை மட்டுமல்ல, புவியியல் நிகழ்ச்சிகளின் அடிப்படையில், அந்த நாடுகள், தங்களுக்குப் பிராந்தியத்தில் அனுசரணைகளுக்கு ஸ்ரீலங்காவில் தங்கி இருந்து, அதனைப் பகைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. அமுல்படுத்தக்கூடிய தீர்வாக, அதனை அமல்படுத்த, அழுத்தம் தருவதற்கு இந்தியா உடன் நிற்கும் என்பதை தெளிவாக்குகிறார். அந்தத் துடுப்பு கையளிக்கப்படுகிறது. அப்படியான, தெளிவான நிலை மற்ற சர்வதேசங்களில் இருந்து அமுலாக்கத்திற்கு இல்லை. ஆனால் ஆதரவுகள் உண்டு.

1987ல் இந்தியா ஒப்பந்தத்தோடு தனது படையையும் உள்ளீடு செய்த போது, சமயோசிதமும் சாதுரியமான அரசியலும் தமிழர் தரப்பில் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். சைப்ரஸ் தீவின் துருக்கி இனத்தவர்கள், துருக்கியின் படைகளுக்கு அனுசரணையாக நடந்து ஏற்படுத்திக் கொண்ட அனுகூலங்களை நாமும் ஏற்படுத்தி இருக்கலாம்.

அந்த ஆதரவு சூழ்நிலைகள் இன்று இல்லை. ராஜபக்ஷ ஆட்சியில் இராணுவங்களில் சேர்க்கப்பட்ட மூன்று லட்சத்திற்கும் மேலானவர்கள் முறையான ஆயுதப் பயிற்சிகள் பெற்று, ஸ்ரீலங்காவின் எதிர்காலத்தில் – முக்கியமாக இனப் பிரச்சினைகளில் – பௌத்த சங்கங்கள் போன்று பங்கு வகிப்பதும், அரசியல் கட்சிகள் பிரிந்து ஆதரவுகளின்றி பலமான அரசை அமைக்க முடியாமல் இருப்பதும் ஸ்திரமான நிலையை நாட்டிற்குத் தரவில்லை.

இந்தியாவுக்கு எதிராகப் பரவணியாக இருக்கும் காழ்ப்புணர்ச்சி திரும்பவும் இராணுவம் தலையிட்டால் முறையான போராகவோ, அன்றில் ஆயுதப் பயிற்சி பெற்ற இராணுவத்தினர், அரசியல் கட்சிகளின் முன்னெடுப்பில் புரட்சியில் இறங்கலாம். சோமாலியா போன்று அரசு இல்லாத நாடாக (failed state ஆக) மாறி, குழுக்கள் அதிகாரம் செலுத்தினால் இந்தியாவின் கவனிப்புக்கு ஆளாகும். ஆனால் அதை விடுத்து, இராணுவ உள்ளீட்டை வடக்குக் கிழக்கு பகுதிகளில் சீனாவோடு உள்ள பதற்றங்களால் தவிர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்பும்.

ஆனால் தமிழ் மக்கள் முகநூல் பதிவுகளில், நாட்டில் அரசியல், தேர்தல் கட்சிகள் எல்லாவற்றினதும் 'ஆட்டம் குளோஸ்', இனி ஐ.நாவின் மனித உரிமை மன்றும், சர்வதேச குற்றவியல் மன்றும்தான் ஏதும் தீர்வு தர வேண்டுமென பதிவிடுகிறார்கள். இந்த கட்சிகள் மட்டுமல்ல, புலம்பெயர் சமூகமும் கூட, தீர்வுக்காக அதை, இதைக் கடித்தனவே ஒழிய, இந்த 75 வருடங்களில் எதனையும் ஆணித்தரமாக அடைந்ததில்லை. அவற்றை நாளைய பதிவில் பார்ப்போம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## புதிய ஆணையுடைய .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பணத்தை மருந்துப் பொருட்களுக்கும் வேறு பல தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். எம்மிடம் ஆட்சி கிடைத்தால் 3 வருடங்களுக்குள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சரியான பொருளாதாரத் திட்டம் எம்மிடம் இருக்கின்றது. சஜித் பிரேமதாஸ அதைச் சரியாகச் செய்வார். அவர் திருடர் அல்ல.

இந்தப் பக்கத்தால் கிடைக்கின்ற பணத்தை அந்தப் பக்கம் மக்களுக்காகச் செலவு செய்பவர். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே அவர் பல சேவைகளைச் செய்து வருகின்றார் – என்றார்.

## ஈஸ்டர் தாக்குதலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீரழித்தவர்களுக்கும் நீதிமன்றம் கொடுக்க வேண்டும். பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் இன்றும் அமைச்சர்களாக உள்ளனர். இன்றும் நாட்டைச் சீரழிக்கின்றனர்.

சிரேஷ்ட அமைச்சர்களுக்கு நான் எதிரானவன். அவர்கள்தான் இந்த நாட்டைச் சீரழித்தவர்கள். அவர்கள்தான் பிழையான யோசனைகள் வழங்குபவர்கள்.

நாட்டை வீழ்ந்த இடத்தில் இருந்து கட்டியெழுப்புவது எப்படி என்று யோசிக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பந்தமாக ஆட்சிக்கு வந்ததும் பிரச்சினையைத் தீர்ப்போம் என்றார்கள். அது நடந்ததா? இல்லை.

இந்தத் தாக்குதலை நடத்தியவர் யார்? உங்கள் முன்னாள் தலைவர் கோட்டா பயவா? அதற்காகத்தான் அவர் மக்களால் விரட்டப்பட்டாரா? எதற்காக அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது? ஆட்சியைப் பிடிப்பதற்காகவா அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது? நீங்கள் நாட்டுக்குக் கூறவேண்டும். தர்க்கரீதியாக நீங்கள் பிழையை சரி செய்து வெற்றிகொள்ளலாம். ஆனால், மனச்சாட்சியின்படி நீங்கள் தோல்வியடைவீர்கள் – என்றார்.

## நாளை கூடுகின்றது ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிப்பதற்கான நியமனம் அண்மையில் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

இதன்படி கலாநிதி பிரதாப் இராமானுஜம், மருத்துவர் தில்குஷி அனுலா விஜேசுந்தர, கலாநிதி வெலிகம விதான ஆராச்சிகே தினோ சமரரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலாநிதி இராமானுஜம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்டிருப்பதுடன், ஒரு தசாப்தத்துக்கு மேலாக பல அமைச்சுக்களின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தில்குஷி அனுலா விஜேசுந்தர துறைசார் வைத்திய நிபுணராவார். கலாநிதி தினோ சமரரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

## தமிழ்நாடு மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியக் குழுவினர் வருகை தரவுள்ளனர்.

நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசைப் படகுகளின் உரிமையாளர்களும் இராமேஸ்வரம் விசைப்படகு சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுமே யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இந்தக் குழுவில் 10 பேர் அடங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களது படகுகளில் இருந்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுவிட்டபோதும் படகுகள் விடுவிக்கப்படவில்லை. அவற்றை இலங்கை கையகப்படுத்துவதற்கான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. எனினும் இரு நாட்டு உறவுகளின் அடிப்படையில் அதனை முழுமையாக நடைமுறைப் படுத்தாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்கிறார்கள் என்றும் அதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் வடக்கு மீனவர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் இது தொடர்பில் தமது கண்டனத்தைத் தெரிவித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்தினார்கள். அப்போது மீனவர்கள் மத்தியில் பேசிய மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர் படகுகளை இடித்து விரட்ட அரசினால் பறிமுதல் செய்யப்பட்ட அவர்களின் படகுகளை இலங்கை மீனவர்களுக்குத் தான் தருவார் என்று வாக்குறுதியளித்திருந்தார்.

## மாணவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பரீட்சைகள் நேற்றுத் தொடங்கின. பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மாணவி ஒருவரின் அனுமதி அட்டை மற்றும் அடையாள அட்டை என்பன ஞாயிற்றுக்கிழமை தீயில் கருகி சாம்பராகின. இதனால் அவர் பரீட்சை எழுதுவதே கேள்விக்குறியாகிவிட்டது.

இரவு மின்சாரத் தடை ஏற்பட்டபோது – எண்ணெய் விளக்கு ஒன்றில் படித்துக் கொண்டிருந்த மாணவி. அப்போது விளக்குத் தவறுதலாகத் தட்டுப்பட்டு, மேசையின் அருகில் தயார் நிலையில் இருந்த பரீட்சை அனுமதி அட்டை மற்றும் அடையாள அட்டை என்பவற்றின் மீது விழுந்ததில் அவை தீப்பற்றி எரிந்து நாசமாகின.

யாழ். குடாநாட்டின் பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கே இந்த அவலம் நேர்ந்தது. அரசியல்வாதிகள் விட்ட தவறு இந்தச் சிறுமியின் வாழ்க்கையில் விளக்கு வடிவத்தில் விளையாடியது.

பரீட்சைக்குத் தேவையான ஆவணங்கள் அனைத்தும் தீயில் எரிந்துபோனதால் மாணவி மனமுடைந்துபோனார். தனது எதிர்காலத்தை எண்ணிக் கவலையடைந்தார். இதைப் பார்த்த அவரது பெற்றோர் உடனடியாக பாடசாலை அதிபருக்கு அறியத் தந்தனர். விரைந்து செயற்பட்ட அவர் நிலைமையை கல்விப் பணிப்பாளருக்கு அழைப்பெடுத்து விளக்கினார்.

இந்த முயற்சிகளின் பயனாக மாணவிக்கு இரவோடு இரவாக அனுமதி அட்டை மற்றும் தற்காலிக அடையாள அட்டை என்பன தயாரிக்கப்பட்டு மாணவி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டார்.

## ஈஸ்டர் தாக்குதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நட்டஈட்டைச் செலுத்த மைத்திரிபாலவிடம் பணம் இல்லை. அவரது நண்பர்களிடம் உதவி கோரியுள்ளார். அவர் பணம் சம்பாதிக்கவில்லை. அவர் திருடர் இல்லை. அவருக்கு எதிராக ஊழல், மோசடி, திருட்டுக் குற்றச்சாட்டுக்கள் இல்லை.

அப்படிப்பட்ட ஒருவரால் 10 கோடி ரூபா தேடுவது என்பது மிகவும் கஷ்டம். எமது கட்சியால் எதுவும் உதவி செய்ய முடிந்தால் செய்வோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்டது அவர்தான். அவரது அரசியல் சிக்கலானது. இரண்டாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாமல் போனது. அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார் – என்றார்.

## தன் காலத்திலேயே .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரின் கொழும்பு இல்லத்தில் அண்மையில் மஹிந்த சந்தித்து உரையாடியமை தொடர்பில் அவரிடம் எமது செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

தமிழர் தரப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடங்கியுள்ள தீர்வுக்கான பேச்சுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். இதைச் சம்பந்தனிடம் நான் நேரில் தெரிவித்துள்ளேன்.

அதேவேளை, நாட்டில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு மட்டும் பிரச்சினைகள் இல்லை. சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அந்தத் தரப்புக்களுடனும் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்துவைப்போம் என்று ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இந்த நல்ல கருமங்களை எவரும் குழப்பியடிக்க இடமளிக்கமாட்டோம். இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். சமாதானம் மலர வேண்டும். ஒரே குடையின் கீழ் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் – என்றார்.






காலைக்கதிர் Kalaikkathir

## இந்தியா தமிழ் மக்களை நேசிக்கிறது

# இந்தக் காலகட்டத்தை மிகச் சரியாக நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்

### வறட்டுச் சித்தாந்தம் கதைக்கும் நேரம் இல்லை என்கிறார் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர்

(ந. லோகதயாளன்)

இந்தியா தமிழ் மக்களை நேசிக்கின்றது. இந்தியா வெளிவிவகார அமைச்சர் அடிக்கடி இலங்கைக்கு வந்து போகிறார். இந்தக் காலகட்டத்தை நாம் மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது வறட்டுச் சித்தாந்தம் கதைக்கும் நேரம் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா.

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை சுன்னாகத்தில் உள்ள வலி. தெற்கு பிரதேச சபை வளாகத்தில் திறக்கப்பட்டது. சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்து மாலை அணிவித்த துணைவேந்தர் அங்கு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா, சீனா, இந்தியா வல்லரசு நாடுகள். எங்களுடைய பூர்வீகத்தொடர்பு இந்தியாவுடன்தான் இருக்கிறது. இந்தியா வெளிவிவகார அமைச்சர் அடிக்கடி இலங்கைக்கு வந்து போகிறார். அவர் தனக்கு வேலையில்லாமல் இங்கு வந்து போகவில்லை.

அவர்களுக்கு ஏற்கனவே எல்லைப் பிரச்சினைகள் நிறைய இருக்கிறது. கஷ்மீரில் இருக்கிறது, அசாமில் இருக்கிறது. பாகிஸ்தானுடன் – சீனாவுடன் எல்லாம் பிரச்சினை இருக்கிறது. அப்படியிருந்தும் அவர் இங்கு வந்து போகிறார்.

இந்தக் காலகட்டங்களை நாம் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இது வறட்டுச் சித்தாந்தம் கதைக்கும் நேரம் இல்லை. இந்தியா வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கரை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் தானே வாக்களிக்கப் போகிறார்கள்? மக்களில் ஒருவரைத்தானே தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்? இதில் பதற்றப்பட என்ன இருக்கிறது? உள்ளூராட்சித் தேர்தலில் சிறந்த முறையில் பங்கு பற்றி, சிறந்த பிரதேச சபைகளை உருவாக்க வேண்டும். முதலில் உள்ளூராட்சி சபைகளைச் சிறந்ததாக உருவாக்க வேண்டும். அதன் பிறகு வடக்கு – கிழக்கை பார்த்துக் கொள்ளலாம்.

வரவிருப்பது உள்ளூராட்சித் தேர்தல். உங்களுக்குத் தெரியும் உள்ளூரில் யார் சிறந்தவர் என்று, உள்ளூரில் தகுதியானவருக்குப் பொறுப்புடன் வாக்களித்து உள்ளூராட்சி சபைகளைச் சிறப்பாக அமைத்து, நாம் பொறுப்புடன் செயற்படவேண்டும். இது, பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலம்.



தமிழ்க் கட்சிகள் இப்போது மூன்று கட்சிகளாகி வந்திருக்கிறார்கள். திரிசூலம் என்று சொல்லலாம். முன்னர் காங்கிரஸ், தமிழரசு என்றார்கள். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்றார்கள். இப்பொழுது உதய சூரியன் எங்கேயோ நிற்கிறது. ரீ.என்.ஏ பிறகு டீ. ரீ.என்.ஏ. வந்திருக்கிறது. வீடு – சைக்கிள் – குத்துவிளக்கு என்று திரிசூலமாக நிற்கிறார்கள். சிவன் வைத்திருக்கும் திரிசூலமாகக் காணப்படும் தமிழ்க் கட்சிகள் எம் மக்களுக்கு சமாதானத்தை கொண்டு வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# 450 போதை மாத்திரைகளுடன் குப்பிளான் இளைஞன் கைது!

நெல்லியடியில் 450 போதை மாத்திரைகளுடன் 24 வயது இளைஞன் ஒருவன் கைதுசெய்யப்பட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரச புரனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, நெல்லியடி பொலிஸ் நிலை பதில் பொறுப்பதிகாரியும், உதவி பரிசோகருமான ரத்நாயக்கா தலைமையில் குறித்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி உப்பு வல்லை சந்திப்பகுதியில் இரவு (22) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குப்பிளான் வடக்கு குப்பிளானை சேர்ந்த 28 வயது இளைஞன் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார் என்கின்றனர் பொலிஸார்.

சந்தேகநபரை இன்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




# முள்ளந்தண்டுவடம் பாதிப்பட்டவர்களுக்கு ஹற்றன் நனஷல் உதவி

போரில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஹற்றன் நனல் வங்கியினால் உதவிகள் வழங்கப்பட்டன.

வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி வடமாகாணத்திற்கு வருகை தந்திருந்த வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜொனதன் அலஸ் இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

மாங்குளத்தில் அமைந்துள்ள உயிரிழை என்கிற முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான அமைப்பின் அலுவலகத்திற்கு வருகை தந்த அவர், சக்கரநாற்காலி ஒன்று மற்றும் இரண்டு காற்று மெத்தைகளை வழங்கி வைத்தார்.

அங்கிருந்த மாற்றுத் திறனாளிகளுடன் கலந்துரையாடி வங்கியின் தலைமை அதிகாரி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். தன்னாலான ஒத்துழைப்புக்களை அவர்களுக்கு நல்குவார் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஹற்றன் நனல் வங்கி வடமாகாண செயல்பாட்டு முகாமையாளர் நிரந்தன் கருணைராஜ் மற்றும் வங்கியின் மல்லாவிக் கிளையின் முகாமையாளர் அமிர்தலிங்கம் அமிர்தசொருபன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்

## அதிக விலைக்கு முட்டை விற்ற 7 வர்த்தகர்கள் கைது

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்வதுதொடர்பாகநுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கம்பஹா மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட தேடுதலின் போது அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த 7 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் முட்டை விற்பனைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள நிலையில், கிரிபத்கொட, களனி, மாகொல மற்றும் பட்டிய சந்தி ஆகிய பகுதிகளில் 50 முதல் 60 ரூபா வரையிலான விலையில் வியாபாரிகள் விற்பனை செய்வதாக தெரியவந்ததையடுத்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## இலவச பாடப் புத்தகங்களை வழங்க அரசு முழு நடவடிக்கை

*2023 ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணைக்காக மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*45% பாடப்புத்தகங்கள் அரச அச்சங்களிலும், 55% பாடப்புத்தகங்கள் தனியார் அச்சக நிறுவனங்களாலும் அச்சிடப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அதன்படி தகுதி வாய்ந்த 22 தனியார் அச்சக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியக் கடன் உதவியின் கீழ் பெறப்பட்ட காகிதத்தின் முதல் கையிருப்பையும் அரச அச்சுகங்கள் பெற்றுள்ளன, தொடர்ந்து பாடநூல் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.*

*மேலும் கல்வி அமைச்சர் ஒப்பந்தத் தொகையில் 20 சத வீதத்தை தனியார் அச்சக நிறுவனங்களுக்கு முன்பணமாக வழங்க அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளார்.*

*2022 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் மூலம் கோரப்பட்ட அச்சகங்களுக்கு இந்த முன்பணத்தில் சுமார் 50% வழங்க கல்வி வெளியீடுகள் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.*

*இதன்படி, கல்வி அமைச்சு ஏற்கனவே பல தனியார் அச்சகங்களில் இருந்து அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களைப் பெற்றுள்ளதுடன், மேலும் இதுபோன்ற பாடப்புத்தகங்கள் பெறப்படும் நிலையில் உள்ளன.*

*எஞ்சிய முற்பணங்களுக்கு திறைசேரியிடம் பணம் கோரப்பட்டிருந்த நிலையில், கல்வி அமைச்சரின் தலையீட்டின் பின்னர் அதில் ஒரு பகுதியை வழங்க திறைசேரி ஒப்புக்கொண்டுள்ளது.*

*அதன்படி, வரும் வாரத்தில், அச்சகங்கள் சமர்ப்பித்த பில்களுக்கும், முன்பணத்தில் இருந்து அச்சகங்களுக்கு செலுத்த மீதமுள்ள பகுதிக்கும் பணம் விடுவிக்கப்படும்.*

## 81 பறவையினங்கள் அழியும் அபாயத்தில்

இலங்கையில் கிட்டத்தட்ட 81 பறவை இனங்கள் அழியும் அபாயத்தில் இருப்பதாக இலங்கையின் உயிர்பல்வகைமை செயலகம் தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிர்பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் ஆர்.எச்.எம்.பி. அபேகோன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையானது 435 வகையான பறவையினங்களைக் கொண்ட உயிர் பல்வகைமை பெருக்கத்தின் முக்கிய இடமாக இருப்பதாகவும், 2022ஆம் ஆண்டின் சிவப்பு தரவுப் புத்தகத்தில் நாடளாவிய ரீதியிலான ஆய்வின்போது இது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அபேகோன் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2023இல் வெளியிடப்பெற்றது.